REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

REGISTRAR
University of Jaffna

# உண்மை
# UNMAI

இதழ் 12 26 01 1990 விலை ரூபா 4.50

உள்ளே ☞

★ உன்னிச்சை படங்கள்
★ யார் இவர்?
★ ஆய்வுக் கட்டுரை
★ கேள்வி - பதில்
★ காடையன் குழுவின் காமக் கொலைகள்
★ எத்தளம் தான்போனாலும் முஸ்லிம் காங்கிரஸ் புத்தளம் போக முடியாதாம்·


## இன்று முதல் யாழ் நகரில்
# புலிக் கொடி

(யாழ் நகரிலிருந்து எமது விசேட நிருபர் இன்பலவன்)

**யாழ். மாவட்டத்தின் பலாலி,காங்கேசன்துறை தவிர்ந்த ஏனைய அனைத்து இடங்களிலுமுள்ள அந்நியப்படையினர் வாபஸ் ஆகிக்கொண்டிருப்பதனைத் தொடர்ந்து மாவட்டத்தின்முக்கிய பகுதிகள் அனைத்தும் புலிகளின் வசமாகியுள்ளது. இன்று முதல் யாழ். நகரம் புலிகளின் நேரடி கட்டுப்பாட்டின்கீழ் வந்து கொண்டிருக்கிறது.**

கடந்தவாரம் அரியாலை யில் ஏற்பட்ட சம்பவங்களை தொடர்ந்து நாவற்குழி பண்ணை மற்றும் யாழ்ப் பாண மாவட்டத்தின் முக்

(8ம் பக்கம் பார்க்க)



இராணுவத் தளபதி திரு. வே. பிரபாகரன்

## நடப்பவை எதையுமே என்னால் மறக்க முடியாதுள்ளது

-ஈஸ்வரன்

அண்மையில் இலங்கை பாதுகாப்பு படையினரால் மலையகத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டு எந்தவொரு தீவிரவாத இயக்கத்துடனும் தொடர்பு கொண்டிருக்கவில்லை என ஊர்ஜிதப்படுத்தப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்ட முன்னாள் புளட் தலைவர்களில் ஒருவரான திரு. ஈஸ்வரன் அவர்களை கொழும்பு நகரவீதி ஒன்றில் தனிமையாக தனது வழமையான பாணியில் சவரம் செய்யப்படாத முகத்துடனும், சோகம் ததும்பிய சிந்தனையுடனும் குனிந்தவாறு நடந்து சென்று கொண்டிருக்கும் வேளையில் தற்செயலாக இவரை அடையாளம்கண்டு கொண்ட எமது நிருபர் அவருடன் சில நிமிடம் பேசிய, சில விடயங்களை பேட்டியாகவே தருகிறோம்

ஆசிரியர் குழு

கேள்வி: நீங்கள் அண்மையில் கைது செய்யப்பட்டதன் காரணமென்ன?

பதில்: என்னைப்பற்றி தவறான தகவல்கள் ராணுவத்தினருக்கு கொடுக்கப்பட்டிருந்தது.

கேள்வி: உங்கள் விடுதலைக்கு ஓர் சிங்கள கனவான் முன்னின்றதாக அறிய முடிந்தது அதுபற்றி?

பதில்; ஆமாம். இனவாதத்தின் மத்தியிலும் மனிதாபிமானம் இன்னும் மடிந்துவிடவில்லை எனலாம்

கேள்வி: விரைவில் மட்டக்களப்பிற்கு செல்ல உள்ளீர்களாமே?

பதில்: அது தொடர்பாகத்தான் நிலைமைகளை அவதானித்துக் கொண்டிருக்கிறேன்.

கேள்வி: தற்போதைய வடகிழக்கு நிலைமைகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: துயரம் நிறைந்த நிகழ்வுகளை சுமந்து கொண்டிருக்கும் எமது மக்களை எண்ணி வேதனைப்பட மட்டுமே என்னால் முடிகிறது.

(5ம் பக்கம் பார்க்க)

## மு. கா. தலைவர் ஜனாப் அஷ்ரப் காரியப்பரிடம் மூன்று கேள்விகள்

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் அஷ்ரப் காரியப்பர் முஸ்லிம் மக்களின் மனதில் தோன்றியுள்ள சந்தேகங்கள் சிலவற்றிற்கு பகிரங்கமாக பதிலளிப்பாரா?

1. 1988ம் ஆண்டு நடைபெற்ற வட-கிழக்கு மாகாணசபைத்தேர்தலின் போது இந்தியாவின் ஆதிக்கத்தையும், கௌரவத்தையும் நிலைநாட்டுவதற்காக தேர்தலில் போட்டியிட சம்மதித்து ரூபா ஐம்பது லட்சம் சந்தோஷப் பணமாக இந்தியாவிடமிருந்து பெற்றது உண்மைதானா?

(7ம் பக்கம் பார்க்க)

# அரக்கன் சரிந்தான்

**அண்மையில் வட-கிழக்கு மாகாணசபை ஆளுங்கட்சி உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்க திருமலை மாவட்ட முக்கியஸ்தனுமான ஜோர்ஜ் திருமலை நிலாவெளி வீதியின் 6ம் கட்டை பகுதியில் வைத்து தீவிரவாதக் குழுவொன்றினால் சுட்டுக் கொல்லப்பட்டது தெரிந்ததே.**

ஜோர்ஜின் மரணம் திருமலை மக்கள் மத்தியில் வெளிக்காட்டிக் கொள்ளாத பெரு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதை அப்பகுதி மக்கள் பேசிக்கொள்கின்ற விதத்தில் புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. கொலை செய்யப்பட்ட ஜோர்ஜ் பற்றி பல அதிர்ச்சி தகவல்கள் மக்கள் மத்தியில் வெளியாகிறது. அவற்றை

(8ம் பக்கம் பார்க்க)

★ முற்போக்கு அரசியல் நடுநிலை செய்தி பத்திரிகை ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை
UNMAI

ஜனவரி 26 1990


## இன்றைய அமைதி நிரந்தரமாக வேண்டும்!

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கடந்த ஆறு வருடங்களாக ஏற்பட்டிருந்த பதட்ட நிலை இறுதி இரண்டாண்டுகள் உச்சக்கட்டத்தை அடைந்தது. இவ்வாறான கேவலமான நிலையை உருவாக்கிய இந்திய உளவுப்படையும் அவர்களின் கைக்கூலிகளும் அகன்ற பகுதிகளில் பூரணத்துவமான அமைதியான சூழல் ஏற்பட்டிருப்பது யாரும் எதிர்பாராத ஒன்றே. இவ்வாறான அமைதி தோன்றியதற்கான காரண கர்த்தாக்கள் எமது பிரச்சினைகளை நாமே பேசி தீர்த்துக் கொள்வோம் என யுத்த களத்தில் நின்ற புலிகளுக்கு நேசக்கரம் நீட்டிய எமது இன்றைய மாண்புமிகு ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ அவர்களும் இவ்வழைப்பை தூரதிருஷ்டி சிந்தனையுடன் ஏற்றுக்கொண்டு பேச்சுவார்த்தைகளுக்கு முன்வந்த விடுதலை புலிகளுமே என்பதும் மறக்க முடியாது. இருசாராரும் கருத்தொருமித்து மேற்கொண்ட முடிவினால் ஏற்பட்ட அமைதியை குலைப்பதற்கு அந்நிய சக்திகள் தனது கைக்கூலிகள் மூலம் பல சூழ்ச்சிகளை புரிந்த போதும் தீரம் மிக்க புலிகளின் வீரத்தால் அவை முறியடிக்கப்பட்டு அமைதி நிலை நிறுத்தப்பட்டு விட்டது. இவ்விதமாக பல சோதனைகளையும் வேதனைகளையும் தாண்டி நிலைநிறுத்தப்பட்ட அமைதியை குலைப்பதில் அந்நிய கைக்கூலிகள் பலவிதமான பொய்ப்பிரச்சாரங்களை மக்கள் மத்தியில் தற்சமயம் கட்டவிழ்த்து விட்டு மக்கள் மத்தியில் பய பீதிகளை உருவாக்கும் முயற்சிகள் திரைமறைவில் தீவிரமாக்கப்பட்டுள்ளது.

எனவே, தமிழ் பேசும் மக்களின் நலனில் உண்மையான அக்கறை கொண்ட விடுதலை புலிகள் மிகவும் மதி நுட்பத்துடன் செயற்பட்டு இன்றைய அமைதியை நிரந்தரமான அமைதியாக்கி விடவேண்டும் என கேட்டுக் கொள்ளுகின்றோம்.

## மீண்டும் பூனைகள் மதில்மேல்!

இன்றைய மேன்மை தங்கிய ஜனாதிபதியவர்களின் தலைமையிலான அரசுக்கெதிராக எதிர்க்கட்சிகளில் நான்கு கட்சிகள் கூட்டாக நம்பிக்கையில்லா பிரேரணையொன்றை சமர்ப்பித்து விவாதமும் நடைபெற்றது யாவரும் அறிந்ததே.

தமிழ் பேசும் மக்களின் இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இப்பிரச்சினையில் தீர்க்கமான ஓர் முடிவை மேற்கொண்டு செயலாற்ற வேண்டியது அவசியமானது. நான்கு எதிர்க்கட்சிகளின் வரிசையில் ஈ.பி.ஆர்.எல்.எப். தன்னையும் வெளிப்படையாக இணைத்துக் கொண்டுள்ளது. ஈ.பி.ஆர்.எல். எப். இம்முடிவை மேற்கொண்டதற்கான அடிப்படைக் காரணம் இன்றைய அரசு விடுதலை புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி தேசிய இனப்பிரச்சினைக்கு இந்திய தரகுயின்றி ஓர் முடிவை மேற்கொள்ள விருப்பதே. எனவே இந்தியாவின் கைக்கூலிகளான ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கம் இவ்வரசாங்கத்துடனான தனது எதிர்ப்பை வெளிப்படையாக சாண்பிக்க இச்சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்த தயாராகினர்.

ஆனால், பச்சோந்திகள் இயக்கம் தாம் இப்பிரச்சினையில் கலந்து கொள்ளாது நடுநிலைமை வகிக்கப் போவதாக கூறியிருந்தார்கள்.

எதிர்க்கட்சிகள் எப்படியான குற்றச்சாட்டை கூறினாலும் தமிழ்பேசும் மக்கள் இன்று இவ்வரசாங்கத்தை ஆதரிக்கவேண்டியது அவசியமானது. 1955 ம் ஆண்டு தவறவிட்டது போன்று இப்போதும் தவறவிட்டால் தமிழ் பேசும் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு தடைப்படும் வாய்ப்புகள் உண்டு. விடுதலை புலிகளும் - அரசும் இன்று தேசிய இனப்பிரச்சினையை தீர்வுக்கு கொண்டுவர திட சங்கற்பம் பூண்டு செயல்படுகின்றனர். இவ்வாறு ஏற்படக்கூடிய தீர்வை ஏற்றுக்கொண்டு தமது வாழ்வில் இனிமேலாவது சுபீட்சத்தை காண தமிழ் மக்களும் தயாராக இருக்கிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில் தான் தமிழ்பேசும்மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண பாராளுமன்றம் சென்ற பச்சோந்தி கூட்டம் நடுநிலை நாடகம் நடாத்தி இருபக்கத்துக்கும் நல்லவர்களாக இருந்து கொண்டதுடன் தமது பாராளுமன்ற அலவன்ஸையும்பாது காத்துக்கொண்டனர்.

காலத்துக்கு காலம் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை தீர்த்துவைக்க முன்வருகின்ற அரசுக்கு தலையிடி கொடுக்கும் அதே வேளை தமது மக்கள் செல்வாக்கை பெருக்கிக் கொள்வதற்காகவும் எதிர்க்கட்சிகள் பிரச்சினையின் தன்மையும் அதன் பின் விளைவுகளையும் தேசிய அடிப்படையில் பரந்த சிந்தனையுடன் நோக்காது குறிய அரசியல் நலத்தை கருதி செயல்பட்ட எதிர்க்கட்சிகளின் நடவடிக்கைகளால் தான் இலங்கையின் உள்நாட்டு பிரச்சினையை அந்நிய விஸ்தரிப்புவாத நாடுகள் தமக்கு சாதகமாக பயன்படுத்தி கடந்த ஆறுவருடங்களுக்கு மேலாக இலங்கையின் அமைதிக்கும் குந்தகமான ஓர் கொடிய நிலை உருவாக்கினர் என்பதை மறந்து விடமுடியாது.

ஆனால் இம்முறை எமது மக்களுக்கு அமைதியும் சுபீட்சத்தையும் ஏற்படுத்த கூடியவகையில் பாராளுமன்றத்தை ஓர் பிரச்சார மேடையாக பயன்படுத்தப் போகின்றோம் எனக்கூறி தமிழ்மக்களை ஏமாற்றி பாராளுமன்ற ஆசனங்களை அலங்கரித்துக்கொண்ட பச்சோந்திகள் தமிழ்மக்களின் பிரச்சினைகளை யதார்த்த பூர்வமாக ஆராய்ந்து சிநேகபூர்வமாக நிரந்தர தீர்வொன்றை ஏற்படுத்த அயராது பாடுபட்டு வரும் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸ அவர்களின் அரசுக்கெதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து ஜனாதிபதியவர்களின் கையை வலுப்படுத்த தவறி வழமைபோல் தமது சந்தர்ப்பவாத நிலைப்பாட்டை கையாண்டு கொண்டனர். இவர்களின் இந்நடவடிக்கை 1956 ம் ஆண்டு திரு. அ. அமிர்தலிங்கம் கையாண்ட பச்சை துரோகத்தை சிறிதளவேனும் பிசகாமல் கையாண்டு தமிழ்பேசும் மக்களுக்கு வரலாற்று துரோகம் இழைத்துவிட்டனர். எனக்கூறின் அது மிகையாகாது. இக்கருத்தை குறிப்பிட்டுள்ளது அரசாங்கத்துக்கு வக்காளத்து வாங்குவதற்

(8ம் பக்கம் பார்க்க)



ஜனாதிபதி
ஆர். பிரேமதாஸ

## காடையர் குழுவின் காமக் கொலைகள்

கிளிநொச்சி இந்திய ஆக்கிரமிப்புப்படைகளின் கைகூலிகளான ஈ.என்.டி.எல்.எப். யினரின் பரந்தனில் அமைந்திருந்த முகாமிற்கு பின்னுள்ள வெளியில் புதைக்கப்பட்டிருந்த 15 பெண்களின் சடலங்கள் பொதுமக்களின் உதவியுடன் அண்மையில் தோண்டியெடுக்கப்பட்டுள்ளது. இவ் ஈ.என்.டி.எல்.எப். முகாமிற்கு முத்தன் எனும் ரவுடியே பொறுப்பாகவிருந்தாராம். இவ் முத்தன் கடந்த காலங்களில் புளட் இன் இருட்டறை கொலைக்கும்பலுடன் தொடர்பு பட்டு இருந்தவன் என்பது குறிப்பிடத்தக்கது. கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளில் இந்தியப் படைகளின் துணையுடன் கடந்தகாலங்களில் ஈ.என்.டி.எல்.எப். யினர் நடத்திய காடைத்தனமான கோரச்சம்பவங்களுக்கும் இவனே பொறுப்பாகவிருந்தானும்.

இந்திய காமவெறிக்கூட்டத்தையே மிஞ்சுமளவுக்கு ஈ.என்.டி.எல்.எப். இன் முத்தன் கும்பல் கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளில் புலிகளுக்கு ஆதரவு வழங்குவோர் உதவி புரிவோர் என்ற பெயரில் பெண்களை இவர்களின் விசாரணைக்கென முகாமிற்கு அழைத்து சென்று கற்பழித்து குதறியெறியப் பட்டுள்ளனர்.

கட்டாயப் பயிற்சிக்கென பிடித்துச்செல்லப்பட்டு இம்முகாம்களில் இருந்து தப்பியோடி வந்த பல இளைஞர்களும் இச்சம்பவம் தொடர்பாக உறுதிப்படுத்தியுள்ளனர். இந்திய உளவுப்படையின் றோ இன் வளர்ப்பு பிள்ளையான இக்கும்பல் தனது வயிற்றுப் பிழைப்பிற்காய் எமது மண்ணையும், மக்களையும் காட்டிக்கொடுத்தது மில்லாமல், புலிகளின் ஆதரவாளர்கள், உறவினர்கள் என்ற பெயரில் பல இளம் பெண்களை தமது காட்டுமிரண்டித்தனமான காம வெறிக்கு பலியாக்கி மண்ணுக்குள் முடக்கிய இக் கீழ்த்தரமான துரோகக் கும்பல்களை எமது மண்ணும் மக்களும் மறக்கவும் மன்னிக்கவும் மாட்டார்கள்.

இன்னமும் மறைந்து ஒளிந்து கொண்டிருக்கும் இக் காமவெறி பிடித்த காட்டுமிரண்டிகளை அம்பலப்படுத்தி மக்கள் முன் நிறுத்த புலிகளே முன் நிற்பீர......!

## மு. கா...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

2. மக்கள் மனதில் தோன்றியுள்ள சந்தேகங்கள் நிவர்த்தி செய்யும் முகமாக தனது குடும்பத்தின் சகல சொத்து விபரங்களை 1988ம் ஆண்டு தேர்தலின் முன்பும், பின்பும் உள்ளதை சகல புள்ளி விபரங்களுடனும் பகிரங்கப்படுத்துவீரா?

சம்பாந்துறை- அக்கரைப் பற்றுஆகிய இடங்களில் இந்தியப்படை வீரர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக செய்த அட்டூழியங்களை பகிரங்கமாக கண்டித்தது சம்பந்தமாக, உமக்கும் இந்திய தூதுவரும், உயர் அதிகாரிக்கும் இடையில் நடைபெற்றதாகக் கூறப்படும் இரகசியப் பேச்சுவார்த்தையின் விபரமடங்கிய ஒலிப்பதிவு நாடாவை பகிரங்கப் படுத்துவேன் என இந்திய தூதரக அதிகாரி உம்மை மிரட்டியது உண்மைதானா? உமக்கும் இந்திய தூதரகத்திற்கும் இடையேயான இரகசியஉடன்பாடு என்ன? உண்டா?

ஏ. எஸ். எம். [illegible]
கொழும்பு-12

## அபிவிருத்தி...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கைகளை மேற்கொள்ள புலிகள் நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நம்பிக்கை ஒளி புத்திஜீவிகள் மத்தியில் தெரிகிறது.

குறிப்பு: உண்மை தனது ஒன்பதாவது இதழில் பொதுநல ஸ்தாபனங்களின் இவ்வாறான மோசடிகளை புட்டுக் காட்டி ஆசிரிய தலையங்கம் தீட்டியிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வுக் கட்டுரை

# இலங்கையின் அரசியல் பிரச்சினைகளில் வல்லரசுகளின் ஆதிக்க விஸ்தரிப்புக் கொள்கைத் தாக்கங்கள்

(சென்ற இதழ் தொடர்)

இலங்கையில் ஏறக்குறைய சராசரி 85-90 வீதமான மக்களுக்கு எழுதப் படிக்கத் தெரிந்த நிலை காணப்படும் போதும், மக்களுக்கு அரசியல், சமூகம், பொருளாதாரம், விஞ்ஞானம், தொழில் நுட்பம், பூகோள அரசியல்-இராணுவ தந்திரோபாயங்கள் என்பவற்றின் அடிப்படைகள் சரியாக விளக்கப்படாத நிலையிலும், பாடசாலை, கல்லூரி மாணவர்களுக்கும், சர்வகலாசாலைகளில் பொது, தொழில் துறைக்கல்வி பயிலும் மாணவர்களுக்கும் கூட இவை பற்றிய அடிப்படைகள் கல்விப்பாட திட்டங்களின் விளக்கப்படாத நிலையிலும், சமூகத்தின் பெரும்பான்மையான பங்கினர்கள் 'படிப்பாளர் பகுதியினர்' எனக் கருதப்படும் சிலராலும், வெகு ஜனத்தொடர்பு சாதனங்களாலும் கொடுக்கப்படும் திரிவு படுத்தப்பட்ட போலி விளக்கங்களையே பெரிதும் நம்பியிருக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப்படுகின்றனர். இது தமிழ், சிங்கள மக்கள் மேலும் ஏமாற்றப்பட்டு, பலம் வாய்ந்த நாடுகளின் ஆதிக்கம் நிரந்தர அடிப்படையில் நிலைநாட்டப்பட உதவியாக அமைகிறது.

இலங்கையிலும், ஏனைய மூன்றும் உலக நாடுகளிலும் கல்விப் பாடத் திட்டங்களில் தகுந்த மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு மக்களுக்கு அரசியல், பொருளாதாரம், சமூகம், விஞ்ஞானம், தொழில் நுட்பம், பூகோள அரசியல்-இராணுவ தந்திரோபாயங்கள் என்பவைகளின்அடிப்படைகளில் தெளிவு ஏற்படுத்தும் வரையும், வெகு ஜனத்தொடர்பு சாதனங்களான பத்திரிகைகள், சஞ்சிகைகள் வெளியீடுகள், ரேடியோ, டெலிவிஷன் என்பவைகள் மக்களின் அடிப்படை அறிவை உயர்த்துவதற்கு உகந்த விதத்தில் திட்டமிட்ட முறையில் பயன்படுத்தப்படும் வரைக்கும், இந்த நாடுகளில் வல்லரசுகளினதும், அவற்றின் கைக்கூலிகளினதும் திரிவு படுத்தப்பட்ட பிரசாரங்களும், போலியான அரசியல் ஆய்வுகளும், விளக்கங்களும் மக்களுக்கு குழப்பத்தினை ஏற்படுத்த உதவியாக அமைவதுடன், ஊடுருவல்கள் மேற்கொள்ளப்படுவதற்கும் சாதகமான நிலையே காணப்படும். சிறிய பலம் குறைந்த நாடுகளின் மக்களது அடிப்படை அறிவு மட்டம் குறைவாக இருக்கும்போது, பிராந்திய பலம் வாய்ந்த நாட்டினதும், வல்லரசுகளினதும் ஆதிக்க ஊடுருவல்கள் தொடர்ந்த வண்ணமே இருக்கும்.

குறுகிய கால, நீண்டகால பொருளாதார இலாபங்களின் நோக்கில் பலம் பொருந்திய நாடுகள் தமது ஆதிக்க விஸ்தரிப்பினை மேற் கொள்ள முற்படும்போது, அன்று போல் இல்லாது, இந்த நாடுகள் அதனை மறைமுகமான முறையில் 'தேசிய நலன்கள்', 'பாதுகாப்பு' என்ற போர்வைகளில் இராணுவ, அரசியல், கலாச்சார விஸ்தரிப்புகளூடாக மேற்கொள்கின்றன. இந்த விஸ்தரிப்புக்களை பலம் பொருந்திய நாடுகளில் அதிகாரத்தில் இருப்பவர்கள் தத்தமது நாடுகளில் இருக்கும் அரசியல் விஞ்ஞானிகள், பூகோளவியலாளர்கள், படிப்பாளர் பகுதியினர், இராணுவ தந்திரோபாய வகுப்பாளர்கள் போன்றவர்களால் உருவாக்கப்படும் பூகோள அரசியல் இராணுவ தந்திரோபாயக் கோட்பாடுகளின் அடிப்படைகளில்தான் நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், பலம் பொருந்திய நாடுகளின் ஆளும் வர்க்கங்கள் கடந்த காலங்களிலும், இன்றும் தமது ஆதிக்க விஸ்தரிப்பு கொள்கைகளை எப்படியான பூகோள அரசியல்-இராணுவ தந்திரோபாயக்கோட்பாட்டு அடிப்படைகளின்கீழ் மேற்கொண்டு வந்தனர் என்பதையும் இன்று எப்படி மேற் கொள்ளுகின்றனர் என்பதையும் சிறிய, பலம் குறைந்த நாடுகளின் மக்கள் விளங்கி, சாதுரியமாகச் செயற்படுவதன் மூலமே தமது நாடு பலம் பொருந்திய நாடுகளின் கெடுபிடிகளில் சிக்கிக் கொள்ளாது காப்பாற்றவும் முடியும், தம்மை பொருளாதார, சமூக ரீதிகளில் முன்னேற்றிக் கொள்ளவும் முடியும். இலங்கையின் இன்றைய அரசியல் பிரச்சினையினை சரியாகவும், முழுமையாகவும் ஆராய்ந்து, விளங்கிக் கொள்வதற்கும், எப்படியான கொள்கைகள் கடைப்பிடிக்கப்படுவது இலங்கைத்தீவின் சமூகங்களின் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும் என்பதை அறிந்து செயற்படவும் முற்படும் போது ஒருவர் உலகின் பலம் பொருந்திய நாடுகள் உலகினை ஆதிக்கம் செய்யப் பயன்படுத்திய கோட்பாடுகள் பற்றியும், இந்த கோட்பாடு அடிப்படைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆதிக்க விஸ்தரிப்பு முயற்சிகள் பூகோள ரீதியில் ஏற்படுத்திய அரசியல், பொருளாதார, கலாச்சார மாற்றங்கள் பற்றியும் அவற்றின் தாக்கங்கள் பற்றியும் விளங்கிக் கொள்ள வேண்டியுள்ளது. ஆகவே இங்கு சில அடிப்படை விபரங்களும், விளக்கங்களும் சுருக்கமாக தரப்படுகின்றன.

**அட்மிரல் அல்பிரெட் தயர் மஹனின் கோட்பாடும் ஆதிக்க விஸ்தரிப்பும் :**

> எதிர்கால சந்ததியினர் முக்கியமாக அறிந்துகொள்ள வேண்டிய கட்டுரை

அமெரிக்க கடற்படைத் தளபதியாக இருந்து வந்த அல்பிரட் தயர் மஹன் என்பவர் உலகினை ஆதிக்கம்செய்வதாயின் கடற்படைப் பலமே ஒரு நாட்டிற்கு முக்கியமானது எனவும், யார் கடல் அலைகளைத் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வருகிறார்களோ அவர்களே உலகினை ஆதிக்கம் செய்வர் எனவும் கூறினர். 1890 ம் ஆண்டுகள் முதல், இராணுவ தந்திரோபாய ஆய்வுகளை நடாத்தி வெளியீடுகளை விடுத்து வந்த அட்மிரல் மஹன் கருபியன் கடல் பகுதிகளின் முக்கியத்துவத்தினையும், இந்து சமுத்திரத்தின் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டி, இந்து சமுத்திரத்தினை ஆதிக்கம் செய்வதன் மூலம் தூரகிழக்கு' தென் கிழக்கு ஆசிய நாடுகளையும், தென்-ஆசியா மற்றும் நாடுகளையும் ஆதிக்கம் செய்ய முடியும் எனக் கருதினர்.

1800 ம் ஆண்டுகளில் அமெரிக்க ஜனாதிபதியான மொன்ரோவினது கோட்பாட்டின் அடிப்படையில் அமெரிக்க கண்டத்தில் மேற்கு ஐரோப்பிய நாடுகளான பிரித்தானியா, பிரான்சு, ஸ்பெயின், ஒல்லாந்து, போர்த்துக்கள் என்பவற்றின் ஆதிக்கத்தினை முறியடித்து, ஐக்கிய அமெரிக்காவின் ஆதிக்கத்தினை நிலைநாட்டி வந்த அமெரிக்கருக்கு அட்மிரல் மஹனின் புதிய கோட்பாடு அமெரிக்காவின் ஆதிக்கத்தினை அமெரிக்க கண்டப் பகுதியை தவிர்ந்த ஏனைய பகுதிகளிலும் விஸ்தரிக்க ஊக்கியாக அமைந்தது. அமெரிக்க ஆளும் வர்க்கங்கள் அன்று தமது ஆதிக்க விஸ்தரிப்பினை அமெரிக்க கண்டப்பகுதியில் மாத்திரம் மேற்கொண்டு வந்தபோதிலும், அட்மிரல் மஹனின் கோட்பாடு அடிப்படையில் அமெரிக்க கடற்படை விஸ்தரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. அமெரிக்

## குயிலி

காவைவிட பிரித்தானியா, ஜேர்மனி, ஜப்பான், போன்ற நாடுகளும் தமது கடற்படை விஸ்தரிப்பு வேலைகளை அட்மிரல் மஹனின் கோட்பாடு அடிப்படையில் மேற் கொண்டன.

20 ம் நூற்றுண்டின் இரண்டாவது தசாப்தத்தில் ஜேர்மனி அதனது ஆதிக்கத்தினை விஸ்தரிக்க முற்பட்டது. ஜேர்மனிய ஆதிக்க விஸ்தரிப்பு முயற்சியை முறியடிப்பதில் ஐரோப்பிய நாடுகளுடன் அமெரிக்கா இணைந்து செயற்பட்டது. ஜேர்மனிய ஆதிக்க விஸ்தரிப்பு முயற்சியானது ஈற்றில் முறியடிக்கப்பட்ட போதும், முதலாம் உலக யுத்தமானது அமெரிக்காவினது ஆதிக்க ஊடுருவல் மேற்கு கோளத்திலிருந்து ஐரோப்பாவிற்கு விஸ்தரிக்கப்பட வழிவகுத்தது. ஜேர்மனியினைப் பொறுத்தமட்டில் அதன் கப்பல்கள் வட கடல் பகுதிகளூடாகவே வெளியேறக்கூடிய நிலையில், போர் காலங்களின்போது கப்பல்கள் வெளியேறிய பின்னர் தமது வீட்டுத் துறைமுகங்களை பெரிதும் பயன்படுத்த முடியாத நிலையே காணப்பட்டது. இந்த நிலையில், ஜேர்மனி அதனது ஆதிக்கத்தினை பரந்துபட்ட பூகோள ரீதியில் மேற்கொள்ள கடற்படையினைப் பாரிய அளவில் பயன்படுத்தும்போது, அது பூமியின் வெவ்வேறு பகுதிகளில் உள்ள துறைமுக வசதிகளைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆனல் ஜேர்மனிக்குப் பிரித்தானியா, பிரான்சு போன்ற நாடுகளைப்போல் பெரும் எண்ணிக்கையான காலனிகளும் தீவுகளும் பூமியின் பல பாகங்களிலும் இல்லாத நிலையே அன்று காணப்பட்டது. இதனுல் உலகினை ஆதிக்கம் செய்

(6ம் பக்கம் பார்க்க)

---

சட்டவிரோத செயல்களுக்கு

# புலிகள் தடை !

**மின்பாவனை**

கடந்த காலங்களில்சட்ட விரோதமாக மின்சாரம் பெற்று வந்த நடைமுறையை மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகள் தடை செய்துள்ளனர். இதுபற்றி தெரியவருவது சட்ட விரோதமான முறையில் தொடர்ந்தும் மின்பாவனை செய்து வருவதால் அப்பகுதிகளின் அபிவிருத்திக்கு பெறக்கூடிய வரிகள் தடைப்பட்டு வருவதால் பல புதிய அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாதபடி பொருளாதார தடை ஏற்படுகின்றதாம். தொடர்ந்தும் இவ்வாருன சட்ட விரோத நடவடிக்கைகளில் மக்களை ஈடுபட அனுமதிப்பின் ஒழுக்கமற்ற சமுதாயமொன்றை உருவாகுவதை தடுக்க முடியாததாகிவிடும் என புலிகள் கருதுகின்றனர். கடந்த ஒருவருடமாக இயங்கும் மாகாணசபை நினைத்துக்கூட பார்க்காத சீர்திருத்தங்களை அதிகாரப்பற்றற்ற புலிகள் மேற்கொள்வது கண்டு பல புத்திஜீவிகள் புலிகளின் சீர்திருத்த நடவடிக்கைகளை வெகுவாகப் பாராட்டினர்.

**மது விற்பனை**

சட்ட விரோதமான முறையில் மதுபானம் விற்பனை செய்தல் கசிப்பு உற்பத்தி செய்தல் போன்ற நடவடிக்கைகளை புலிகள் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் இம்மாதம் 15ம் திகதிமுதல் தடை செய்துள்ளனர். இதுபற்றி குடும்பத் தலைவிகள் சிலரை அணுகி விசாரித்தபோது அவர்கள் புலிகளின் இந்நடவடிக்கையை ஆதரித்தனர். குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்பான்மை மக்கள் தமது உழைப்பின் ஊதியத்தில் பெரும் பகுதியை மது வருந்துவதிலேயே செலவழிப்பதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இவ்வாருக குடும்பத்தலைவர்கள் மதுவுக்கு அடிமையாகியிருப்பதனுல் பல குடும்பங்கள் வறுமை கோட்டை தாண்ட முடியாது இருப்பதுடன் இவ்வாருன குடும்பங்களில் உள்ள பிள்ளைகள் திறமையிருந்தும் தமது கல்வியை தொடரமுடியாது சிறுவயதிலேயே கல்விக்கு முழுக்குப்போட்டு விட்டு குடும்பச்சுமையை பொறுப்பேற்க வேண்டிய பரிதாபகரமான நிலைக்கு ஆளாகிறுர்கள். எனவே விடுதலை புலிகள் தற்சமயம் மேற் கொண்டுள்ள முடிவு இவ்வாறு சீரழிந்து போகும் குடும்பத்தவர்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகள்?

## பெருமாளின் குளறுபடி

இந்து சமுத்திர பிராந்தியத்தில் அமெரிக்க ஊடுருவல் பற்றியும், சர்வதேச சமாதானம் பற்றியும் பெருமாள் அண்மையில் தனது கருத்துக்களைத் தெரிவித்ததுடன், 'ஏகாதிபத்திய அடிவருடிகளாக தமிழ் தீவிரவாதிகள் சிலரும் மாறியுள்ளனர்' எனவும், 'இதனால் ஈழ விடுதலை போராட்டம் திசை மாறி இன்றைய அவல நிலைக்குத் தூபமிட்டுள்ளது' எனவும் கூறியுள்ளதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவித்துள்ளன. ஆனால், தமிழீழ மக்களுக்கு இங்கு எழும் முக்கிய பிரச்சினை என்னவென்றால் எந்தத் தமிழ் தீவிரவாதிகள் ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகளாக மாறியுள்ளனர் என்பதும் எவர்கள் ஈழ விடுதலைப் போராட்டத்தின் திசைமாற்றத்திற்கும், அவலநிலைக்கும் காரணம் என்பதுமே!

இந்து சமுத்திரத்தினுள் அமெரிக்காவின் ஊடுருவல் 1966ம் ஆண்டிலேயே தீவிரப்படுத்தப்பட்டது. இந்து மகா சமுத்திரத்தில் இராணுவ தளங்களை அமைத்து, அதனது ஆதிக்கத்தினை நிலைநாட்டும் முயற்சியினை அமெரிக்கா 1966 டிசம்பரில் டியாகோ கார்ஷிமா தீவு தொடர்பாக பிரித்தானியாவுடன் உடன்படிக்கை எழுதியதன் மூலம் தீவிரப்படுத்யிருந்தது.

மாலை தீவுகளின் தென் பகுதியில் அமைந்திருக்கும் டியாகோ கார்ஷியா தீவானது ஏறக்குறைய 44 சதுர கில்லோ மீற்றர் பரப்பளவைக் கொண்டது. இத்தீவில் அன்று 500 இற்குக் குறைவான குடும்பங்களே வாழ்ந்து வந்தன. மொறிஷஸ் தீவில் வருங்கால வர்க்கங்களுடன் இரகசிய ஒப்பந்தத்தினைச் செய்து கொண்ட பிரித்தானியர்கள், டியாகோ கார்ஷியாவின் 1151 குடிமக்களையும் மொறிஷஸ் தீவில் பலவந்தமாகக் குடியேற்றினர். இதைத்தொடர்ந்து டியாகோ கார்ஷியாவில் அமெரிக்கர்கள் மிதக்கும் கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் விமானங்கள், சற்றலைட்டுக்களுடன் தொலைத்தொடர்பு வசதிகளை ஏற்படுத்தும் நவீன தொலைத்தொடர்பு நிலையங்களை அமைத்துக் கொண்டனர். 1973 மார்ச் மாதம் 23ம் திகதியன்று அமெரிக்கர்கள் இந்த தளத்தினை அதிகாரப் பூர்வமாகத் திறந்தபோதும், அமெரிக்க பாதுகாப்பு அலுவலகம் அதனை 1973 யூன் மாதத்திலேயே பகிரங்கமாக உறுதிப்படுத்தியது. அமெரிக்காவினது ஆதிக்க விஸ்தரிப்புக் கொள்கையினை அன்று முதலே இந்தியா, இலங்கை மற்றும் நாடுகள் கண்டித்து வந்தன. ஆனால், அமெரிக்கா டியாகோ கார்ஷியாவில் இராணுவ தளங்களை அமைக்கும் வேலைகளைத் தொடர்ந்து செய்து வந்தது.

1976ம் ஆண்டில் அமெரிக்க செனேட் சபையானது தளங்கள் அமைக்கும் பீதியை விடுவித்ததிலிருந்து, டியாகோ கார்ஷியாவில் 8 ஜெட் என்ஜின்களைக்கொண்ட பி-52 என்ற பாரிய குண்டுவீச்சு விமானங்கள் கே. சி. 135 என்ற பாரிய எரிபொருள் டாங்கி விமானம் மற்றும் பி-1-பி, எப் 111 போர் விமானங்கள் ஓடி ஏறக்கூடிய 4 கில்லோ மீற்றர்கள் நீளமுடைய ஓடுபாதை, அணுகுண்டுகள், நியூக்கிளியர் மிசைல்கள் வைக்கும் ஆயுக் கிடங்குகள், விமானங்கள் நிறுத்தி வைக்கும் வசதிகள், பாரிய விமானம் தாங்கும் கப்பல்கள் இரண்டு கட்டிவைக்கப்படக் கூடிய துறை, இரண்டு மாதங்களுக்குத் தேவையான எரிபொருள்கள் சேமித்து வைக்கக்கூடிய சேகரிப்பு குத வசதிகள், வேலைகளில் ஈடுபடுபவர்களும், படைவீரர்களும் தங்கும் வசதிகள் என்பவை கட்டப்பட்டன. இவற்றிக்கு மேலாக 27,000 விரைந்து அசையும் படையினர்கள் இரண்டு மாத காலங்கள் ஒரு நாட்டினுள் புகுந்து, போரிடுவதற்குத் தேவையான கவச வண்டிகள், ஆயுதங்கள், போர் கருவிகள், எரிபொருட்கள் என்பவை 17 விசேட கப்பல்களில் வைக்கப்பட்டுள்ளன. மேலும், இந்து சமுத்திர பகுதியில் ஏவுகணைகளின் பறப்பினை கண்டறியும் சுற்றலைட்டும், தொலைத் தொடர்பு வசதிகளையும் அமெரிக்கர்கள் அமைத்தனர். 1980 ம் ஆண்டுகளின் தொடக்க பகுதிகளலேயே,

### செய்தி ஆய்வு

இந்த தள வசதிகள் அமைக்கும் வேலைகள் அனைத்தும் பெருமளவில் முடிவுற்றன.

பி-52 குண்டுவீச்சு விமானங்கள் சகல இந்து சமுத்திர நாடுகளையும், ருஷ்சியாவின் சகல பகுதிகளையும் அணுகுண்டுகள் வீசியும் நியூக்கிளியர் ஏவுகணைகளை ஏவியும் தாக்கக் கூடியதாக இருந்தன. இந்து சமுத்திரத்தில் ஒவ்வொன்றும் 89 விமானங்கள், ஹெலிகொப்டர்களைக் காவக்கூடிய பாரிய விமானம் தாங்கிக் கப்பல்கள் இரண்டும், பல போர் கப்பல்களும் அமெரிக்காவால் விடப்பட்டுள்ளன. இவற்றைவிட, ஏறக்குறைய 8,000 கில்லோ மீற்றர் தாக்கல் தூரத்தினை உடைய நியூக்கிளியர் எரி ஏவுகணைகள் பொருத்தப்பட்ட நீர்மூழ்கிக் கப்பல்களும் அங்கு அமெரிக்கரால் விடப்பட்டுள்ளன. ஒவ்வொரு நீர்மூழ்கிக் கப்பலும் 200-320 இலக்குகளை ருஷ்சியாவின் எந்தப்பகுதியிலும் தாக்கக் கூடியது.

இந்த நிலையில், டியாகோ கார்ஷியாவில் அமைக்கப்பட்டுள்ள தள வசதிகளும், இந்து சமுத்திரத்தில் விடப்பட்டிருக்கும் நீர்மூழ்கிக் கப்பல்களும், மிதக்கும் கப்பல்களும் அமெரிக்காவை இந்து சமுத்திர பிராந்தியத்தை ஆதிக்கம் செய்யவும், வல்லரசுகளின் பூகோள இராணுவ விஸ்தரிப்பு போட்டியில், அமெரிக்காது கரங்களை ருஷ்சியாவை விட மேலோங்கவும் வைத்தது. இந்த வசதிகளை ஏற்படுத்திய நிலையில் ருஷ்சியர்கள் இந்து சமுத்திர பிராந்தியத்தில் தள வசதிகளைப் பெருது தடுப்பதே அமெரிக்காது தந்திரோபாயமாக இருந்து வந்தது. இலங்கை அரசியலைப் பொறுத்தமட்டில், அமெரிக்க ஏகாதிபத்தியம் தமிழரின் விடுதலைப் போராட்டத்தினல் நாடு இரண்டாகப் பிரிவதைத் தடுத்து நிறுத்துவதையே முழு முதற்கொள்கையாகக் கொண்டிருக்க வேண்டியிருந்தது! (தொடரும்)

## மரணச் சடங்கன்று திருமலையில் அக்கிரமம்!

அண்மையில் படுகொலை செய்யப்பட்ட வட-கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் மாகாணசபை ஆளும் கட்சியான ஈ.பி.ஆர்.எல். எப். இயக்கத்தின் திருமலை மாவட்ட இராணுவ தளபதியும் முக்கியஸ்தருமான ஜோர்ச் என்பவரின் மரண சடங்கன்று ஒவ்வொரு வீடுகளிலும் கட்டாயமாக கறுப்புக் கொடி பறக்க விடப்படுவதுடன் வாழைகள் வீதிதோறும் கட்டி குருத்தோலை தோரணம் கட்டவேண்டுமெனவும் மாகாணசபை ஆளும் கட்சி குண்டர்கள் திருமலை வாழ் தமிழ் மக்களுக்கு கடுமையான உத்தரவு இடப்பட்டதாம். உயிருக்கு பயந்த மக்களும் இவ்விதமாக வீதிகளை அலங்கரித்ததாகக் கூறப்படுகிறது. வாழை மரம் இல்லாதவர்கள் தென்னோலைகளை வெட்டி சோடனை வேலைகளை வெறுப்புடன் செய்துமுடித்தனராம். பாவம் மக்கள்

(ந. நி)

## ஆய்வுக் கட்டுரை...

(3ம் பக்கத் தொடர்)

யும் முயற்சியில் ஜேர்மனியர்களுக்கு கடற்படைப் பலம் பெருமளவில் உதவ முடியாதே இருந்தது.

ஜேர்மனியர்களது நிலைக்கு எதிர்மாறாக பிரித்தானியா, பிரான்சு, அமெரிக்கா என்பவைகளுக்கு அத்திலாந்திக், பசுபிக், இந்து சமுத்திரங்களில் துறைமுகவசதிகளும், காலனி நாடுகளும் இருந்த நிலையில், கடற்படைப் பலமுடான ஆதிக்க விஸ்தரிப்பினை நிலைநாட்டக்கூடியதாக இருந்தது. பூகோள ரீதியில் ஜேர்மனி தேசம் அமைந்திருந்த விதமானது அன்றைய நிலையில், ஜேர்மனி அதனது ஆதிக்க விஸ்தரிப்பினை வெற்றிகரமாக மேற்கொள்ள கடற்படையை பயன்படுத்த முடியாதே செய்தது. இந்த முயற்சியில், முதலாம் உலக யுத்தத்தின் போது ஜேர்மனி தோல்வி கண்டு சரணடைந்தது. பிரான்சின் 'வேர்சாய் மாளிகை'யில் கைச்சாத்திட்டுக்கொண்டதன்மூலம் ஜேர்மனி அதனது ஆதிக்க விஸ்தரிப்பினைத் தற்காலிகமாக ஆவது நிறுத்தி வைக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

எதுவிதத்திலும் உலகினை ஆதிக்கம் செய்வதற்கு கடற் பலத்தைவிட தரைப்பலமே வருங்காலத்தில் முக்கியமாக அமையும் என பிரித்தானிய சேர் ஹல்போர்ட் மக்கின்டர் என்பவர் தனது புதிய கோட்பாட்டினை 1904 ஆண்டுகளில் முன் வைத்தார். (தொடரும்)

## அபிவிருத்திப் பாதையில் விடுதலைப் புலிகள்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலை புலிகள் பல அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்துவதில் மிகுந்த அக்கறையுடன் செயல்படுகிறார்கள் என்பதை அறிந்து கொள்ளக் கூடியவகையில் பல முற்போக்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். பல பொதுநல ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் கடந்த இரண்டு வருடமாக வெளிநாடுகளில் இருந்து கிடைத்த நிதிகளை அப்பாவி தமிழ் மக்களின் பெயரால் தாம் சுருட்டிக் கொண்டதுடன் அங்குநிலை கொண்டிருந்த எட்டப்பர் இயக்கங்களுக்கும் பெரும் தொகைகளை கொடுத்து உதவி வந்தனராம். இவ்வாறு கிடைத்த பணத்தில் குழந்தைகள் பூங்கா என்ற பெயரில் தனிப்பட்ட காணியொன்றில் குழந்தைகளுக்கு விளையாட ஊஞ்சில் போன்ற சில வகையாறுக்கள் பொருத்தப்பட்டிருந்ததை காணக்கூடியதாக இருந்தது இக் குழந்தைகள் பூங்கா பற்றி அப்பகுதி புத்தி ஜீவிகளிடம் கருத்தறிய முற்பட்டபோது பொதுமக்களின் இதய குமுறல்கள் பல வெளிவந்தன. வீடு பற்றியெரியும் நெருப்பில் சுருட்டுக்கு நெருப்பு எடுத்த கதை தான் இப்பூங்கா போன்ற நடவடிக்கைகள். இவ்வாறான மோசடி பேர்வழிகளை தட்டிக் கேட்கக்கூடிய வல்லமை யாருக்கும் இருக்கவில்லை. காரணம் அவர்கள் பரமசிவன் கழுத்திலிருந்த நாகமாக அந்த நாட்களில் இருந்து கொண்டார்களாம்.

தற்சமயம் விடுதலை புலிகள் இவ்வாறான மோசடிப் பேர்வழிகளின் நடவடிக்கைகளை கண்ணும் கருத்துமாக கவனித்து வருவதால் கடந்தகால மோசடிகள் இடம் பெருது தற்சமயம் மக்களுக்கு ஆக்கபூர்வமாக பயன்படக்கூடிய நடவடிக்

(2ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உன்னிச்சைவெற்றியின்பின்புலிகள்

## ஒரு பூ புயலானது




தமிழீழமே] எங்கள் தாகம் எனத்தாகம்] தீர்க்கத் துடிக்கும் விடுதலைப் புலிகளுடன் இந்தக் கருணுவும் இணைந்தார். இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின் இவருடைய செயற்பாடுகள் மேலும் தொடர்ந்தது. இந்த விடுதலைப் போராட்டத்தைச் சகிக்க முடியாத அந்நிய விஸ்தரிப்பு வாதத்தின் கூலிப் பட்டாளங்களோடு இணைந்த தமிழீழத்திற்கே துரோகம் செய்ய நினைத்த எட்டப்பர்களால் புலி எனக் கூறித் துரத்தப்பட்ட கருணு, பின்னர் உண்மையிலேயே புலியானுர். அந்த விடுதலை வீரன் தலைமறைவாகி வீரப்போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். இந்த வீர வேங்கை வீருக செயல்பட்ட வேளையிலே எதிர்பாராது ஏற்பட்ட விபத்தொன்றில் 26-12-89 அன்று செவ்வாய்க்கிழமை தனது வலது காலை இழந்து விட்டபோதும் வெறி கொண்ட வேங்கையாய் தமது இலக்கை நோக்கி வீறுநடை போடும் கருணுவின் பாதையில் நாமும் தொடர்வோம்.


இவ்வண்ணம்
நண்பர்கள்
ஒந்தாச்சிமடம்



தகுதியற்றவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் பெட்டி பெட்டியாக புலிகளால் வாகனங்களில் ஏற்றப்படுகின்றன.



இந்தியாவால் கையளிக்கப்பட்டு விடுதலைப் புலிகளிஞல் பறிமுதல் செய்யப்பட்ட பல்வகை ஆயுதக் குவியல்



உன்னிச்சைக் காட்டுப் பகுதியில் ஆயுதம்] தாங்கிய புலிகளும்] வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் வீறு விறுப்பாக செய்திகளை திரட்டிக்கொண்டிருக்கும் காட்சி.

## நடப்பவை..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கேள்வி: இலங்-இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் புனர்வாழ்வு பணிகளில் தீவிரமாக ஈடுபட்டீர்களே?

பதில்: பெயரளவிலான ஒப்பந்தத்தின் விளைவுகளால் தொடர்ச்சியாக அப்பணிகளை என்ஞல் மேற்கொள்ள முடியவில்லையே?.........
பெருமூச்சுடன் வார்த்தைகளை விழுங்கிக் கொண்டார்

கேள்வி: உங்களால் மறக்க முடியாத சம்பவம் ஏதும் உண்டா?

பதில்: இன்றுவரை நடப்பவை எதையுமே என்ஞல் மறக்க முடியாதுள்ளது.

தொடர்ந்து பேசிக்கொண்டே அவர் மெதுவாக நகர ஆரம்பித்ததும் அவரது மஞே நிலையை புரிந்து கொண்ட நானும் கை குலுக்கி விடை கொடுத்தேன்.

இன்பலவன்

வழமையான சில பகுதிகள் இடப்பற்ருக் குறையால் பிரசுரிக்க முடியாமைக்கு மன்னிக்கவும்.



உன்னிச்சை காட்டுப் பகுதியில் இந்திய ஆயுதங்களை தேடும் பணியில் விடுதலைப்புலிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனந் தெரியாத துரோகிகள்

## ஈரோஸ் - கிளிநொச்சியில் யோகி

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் முதலாவது பிரச்சார தொடக்க கூட்டம் 12-1-90 அன்று கிளிநொச்சி மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் மத்தியில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் திரு. யோ. யோகி, கிளிநொச்சி அரசியல் பொறுப்பாளர் திரு. தீபன், வன்னி அரசியல் பொறுப்பாளர் திரு. சந்திரன், அரசியல் பிரமுகர் திரு. பரமமூர்த்தி, உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோரும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மகளிர் பிரிவைச் சேர்ந்த செல்வி சுந்தரி, செல்வி கீதா ஆகியோரும் உரையாற்றினர்கள்.

தலைமை உரையாற்றிய வன்னி மாவட்ட பொறுப்பாளர் திரு. சந்திரன் உரையாற்றுகையில், போராட்ட வடிவம் காலத்துக்கு காலம் மாற்றமடைந்திருக்கின்றன. அந்த வகையில் இந்தியாவுடனை யுத்தத்தின் பின் இலங்கை அரசுடனை பேச்சுவார்த்தையின்பின் நாம் எமது அரசியல் பிரிவை ஓர் அரசியல் கட்சியாக பதிவு செய்துள்ளோம் என்றார்.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் மகளிர் அணியின் செல்வி சுந்தரி, செல்வி கீதா ஆகியோர் உரையாற்றும்போது, தமிழீழப்போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. உலகின் பெண்கள் அரைபங்கினர் உள்ளனர். இவர்கள் ஆண் ஆதிக்கத்துக்கும் சமூக ஒடுக்கு முறைக்கும் உட்பட்டுள்ளார்கள் இவ் ஒடுக்கு முறையை பெண்களாகிய எங்களாலேயே உடைத்தெறிய முடியும்.

தமிழீழ போராட்டமானது முன்னர் அகிம்சை ரீதியாக நடைபெற்றுள்ளது. அது ஆயுத பலம் கொண்டு அடக்கப்பட்ட காரணத்தால் ஆயுதம் ஏந்தும் நிலை உருவானது. இந்த ஆயுத ரீதியான போராட்டத்தில் ஒடுக்கு முறையாளனின் பாலியல் வன்முறைக்கு பெண்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். இந்த அடக்கு முறைக்கு எதிராக பெண்கள் ஆயுதம் ஏந்தும் நிலை உருவானது என்றும், எமது போராட்டத்திற்கு பெண்கள் பல வழிகளில் உதவி கேட்கின்றார்கள். எமது மக்களின் முழுமையான விடுதலை என்பது பெண் விடுதலையோடு கூடியிருந்தால்தான் அது பூரண விடு

தலையாக இருக்கும் என்று கூறினர்.

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் உரையாற்றுகையில் எந்த அந்நிய சக்தியும் தமிழீழ மண்ணை வேண்டுமானால் பழிக்கலாம் ஆனால் தமிழீழ மண்ணை ஆள முடியாது. தமிழீழ மக்களை வேண்டுமானால் அழிக்கலாம் ஆனால் அவர்களை வெல்ல முடியாது என்ற பாடத்தை பிரபாகரன் இந்தியாவுக்கு புகட்டினர்.

விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவு ஓர் அரசியல் கட்சியாக மாறுவதை விளக்கவே இந்தக் கூட்டம் நடைபெறுகின்றது.

இந்திய ஸ்ரீலங்கா உடன்படிக்கை ஏற்பட்டபோது 'எங்கள் விடுதலைப் போராட்டம் ஓய்ந்து விடவில்லை' இன்றும் வாத்தியம் முற்று பெறவில்லை இது வொரு கமாவே தவிர முற்றுப்புள்ளி அல்ல என்று நான் கூறினேன். இப்போதும் சொல்கிறேன். கட்சி அரசியலுக்கு நாங்கள்வரும் இந்த நிகழ்ச்சி ஒரு முற்றுபுள்ளி என்று யாரும் எண்ணி விடாதீர்கள் இது நமது போராட்டத்தில் விழும் கமாவே தவிரமுற்றுபுள்ளி அல்ல.

தமிழ் மக்கள் தாங்கள் பெற்று இருப்பது 'சுதந்திரம்' தான் அடிமை நிலையில் இனி இல்லை என்று முழு மனதாய் உணர்கின்ற ஒப்புக்கொள்கின்ற நிலை வரும்வரை முற்றுப்புள்ளிக்கு இடமில்லை.

அரசியல் பிரமுகர் பரமமூர்த்தி உரையாற்றுகையில், எமது போராட்டம் இன்று சர்வதேச ரீதியாக அங்கீகாரம் பெற்றுள்ளது. நாம் இந்நிலையை அடைந்ததிற்கான காரணம் போராளிகள் மட்டும் அல்ல, மக்களாகிய உங்கள் பங்களிப்புமேயாகும்.

விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் செயலாளர் திரு. யோ. யோகி உரையாற்றும் போது, இந்திய அரசு எப்போதுமே எமது மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு தடையாகவே இருந்து வந்துள்ளது என்றும், இன்றும் போராளிகள் யார்? துரோகிகள் யார்? என்பதை மக்கள் தெளிவாக கண்டுள்ளார்கள். இனந்தெரியாத துரோகிகள் ஈரோசையும் மக்கள் இனங்கண்டு கொள்ளவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இந்தியா இன்று தமிழ் தேசிய இராணுவத்திற்கு ஆயுதங்களை கொட்டி கொடுத்து இருப்பது எமது மக்களை பாதுகாப்பதற்கு அல்ல, எமது மக்களின் பாதுகாப்பு அரணாக விளங்கும் புலிகளை அழிக்கவே என்றும் குறிப்பிட்டார். விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியில் மக்கள் அங்கத்தவர்களாக சேரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

ஸ்ரீலங்கா அரசுடன் எமது மக்களின் பிரச்சினைகள் குறித்து பேசி வருகிறோம். இப்பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெறும் எனவும் குறிப்பிட்டார்.

## காவாலி டெலோ உதயன் தலைமறைவு

திருகோணமலை மாவட்டத்தை விட்டு இந்திய இராணுவம் வெளியேறுவதற்கு முன்பதாகவே திருமலை மாவட்ட டெலோ இயக்கத்தை சேர்ந்த பிரபல கேடி காவாலி உதயன் தனது சகாக்கள் சிலருடன் ஆயுதங்கள் சகிதம் பிக்கப் என அழைக்கப்படும் வாகனமொன்றுடன் தலைமறைவாகி விட்டான் என கூறப்படுகிறது. இவன் கடந்த காலங்களில் திருமலை நகரில் அதி கீழ்த்தரமான நடவடிக்கைகள் அனைத்தையும் முன்னின்று செய்து முடித்தவனும். எனவேதான் த[illegible]பிக் கொள்ள புலிகளி[illegible]ணடைந்திருக்கலாம் என அப்பகுதி மக்கள் சந்தேகம் கொள்கின்றனர். புலிகள் மன்னித்தாலும் திருமலை மக்கள் இவனை ஒருபோதும் மன்னிக்க தயாராக இல்லை என கூறுகின்றனர்.

(ந. நி)

## கேள்வி பதில்

ராஜா

காத்தான்குடி, ஏ. எம். சலால்தீன்

கே: விடுதலைப்புலிகள், பொதுமக்கள் நல்லுறவு எப்படி இருக்கிறது.

பதில்; நன்றாக இருக்கின்றது. மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என கருதுகிறார்கள்.

பட்டிருப்பு, கே. ரி. ராஜா, எஸ். ஆர். குமார்

கே; ஆயுதங்களிலும், போரிலும் தான் புலிகள் அதிக விருப்புடையவர்களா?

பதில்: இல்லை. புலிகள் தம்மைக் கொல்ல வருபவர்களைக்கொல்கிறார்கள். இது தவிர்க்கமுடியாதது.

தங்காலை, டி. செல்வகுமார்

கே; ஆசிரியரே! நீங்கள் புலிகளின் வாலைப்பிடிக்கிறீர்கள் என்று சொல்கின்றார்களே?

பதில்; நரிகளின் வாலைப்பிடிப்பவர்கள் அப்படிதான் சொல்வார்கள். நான் உண்மையை எழுதுகிறேன்.

வவுனியா, எஸ். நாகராசா

கே: இயக்க மோதல்களைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

பதில்: திருவிழாக் காலங்களில் கடை போடுவது போல் இயக்கங்களை உருவாக்கியது இந்தியாதான். இயக்க மோதல்களுக்கும் அவர்கள்தான் காரணம்.

அச்சுவேலி, சுகுணா

கே: இந்தியா எமது தாய் நாடா?

பதில்: இல்லை. ஆக்கிரமிப்பு நாடு. கலை, கலாச்சார, பொருளாதார ஆக்கிரமிப்புப் போதாதென்று இந்திய ராணுவ ரீதியிலும் ஆக்கிரமிக்கின்றது.

புங்குடுதீவு, செல்வலிங்கம்

கே: டி. என். ஏ. யில் உள்ள இளைஞர்களுக்கு உங்கள் புத்திமதி என்ன?

பதில்: தங்களை இழி நிலைக்கு கொண்டு வந்த இந்திய ராணுவத்துக்கு எதிராக போராட வேண்டும். இது நடக்குமா?

திருகோணமலை, நவரத்தினராசா

கே: தகுதியற்றவர்களிடமிருந்து ஆயுதங்களை கைப்பற்றுவோம் என்று புலிகள் கூறியது பற்றி?

பதில்: சரியான வேலை. நாய்க்கேன் போர்த் தேங்காய்.

கொழும்பு, டானியல் அன்ரனி

கே: இந்திய அமைதி காக்கும் படையை நீங்கள் ஏன் எதிர்க்கின்றீர்கள்?

பதில்; அவர்கள் அழிந்து போகும் விஷப்பாம்பு முட்டைகளை அடை காக்க வந்தவர்கள். அமைதி காக்க வரவில்லை.

களுவாஞ்சிக்குடி, நிர்மலராஜா

கே: இயக்கங்களுக்கிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தவேண்டும் அது எப்படி?

பதில்: புரிந்துணர்வு இருப்பதால்தான் புலிகள் ஏனைய இயக்கங்கள் என்று சொல்லப்படுவைகளை தடை செய்துள்ளார்கள். செம்மறி ஆடுகள் போல் சாய்கின்ற பக்கமெல்லாம் சாயிற கூட்டத்தை விடுதலை இயக்கம் என்று சொல்லக்கூடாது. தறுதலை இயக்கம் என்று சொல்லுங்கள்.

நீர்கொழும்பு, புஸ்பராணி

கே: ஆசிரியரே! உங்களுக்கோர் புனைப்பெயர் சூட்டுகிறேன். 'கோடை மழை' பெயர் எப்படி?

பதில்; இதய சுத்தியுடன் எந்தப்பெயரை வைத்தாலும் ஏற்றுக்கொள்வேன். உங்கள் விருப்பம் போல் !!

மட்டக்குளி, சண்முகலிங்கம்

கே: 'உண்மை' ஒரு கீழ்த்தரமான பத்திரிகை குள்ளத்தனமானது என்று சொல்கிறேன் இதுசரியா

பதில்: உண்மைதான். கிரிமினல் குண்டர்களுக்கும், கேடிகளுக்கும் இது கீழ்த்தரமானதுதான். கள்ளநோட்டு அடிப்பவர்களுக்கு, இது குள்ளத்தனமானதுதான். ஆனால், பொதுமக்களுக்கு உண்மையான பத்திரிகை. உள்ளதைச் சொன்னால் உடம்பெல்லாம் நோகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழில் வெளிவரத் தவறிய வன்னி-கிளிநொச்சி மாவட்டங்களின் செய்திகள்

சட்டவிரோத மதுவிற்பனை கசிப்பு உற்பத்திக்கு

## புலிகள் தடை

புலிகளின் ஒலிபரப்பு சேவையில் கள்ளத்தனமாக கசிப்பு உற்பத்தியாளர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் உடனடியாக இவ்வாறான சமூக விரோத செய்கைகளை கைவிட வேண்டும் என கடும் எச்சரிக்கை அடிக்கடி விடுக்கப்படுகிறது. இதேபோல் சட்ட விரோதமாக மது விற்பனை செய்பவர்களை அத்தொழிலை கைவிட வேண்டும் என கடும் எச்சரிக்கை விடுக்கப்படுகிறது

புலிகளின்

## கொள்கை விளக்கம்

கிளிநொச்சிப் பகுதியில் நிலை கொண்டிருக்கும் விடுதலை புலிகள் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மாணவர்களுக்கு தமது கொள்கையை விளக்கக் கூட்டம் ஒன்றை நடாத்தியதுடன் அன்று மாலை பெற்றோர்களுக்கும், மாணவர்களுக்கும், பொதுமக்களுக்குமாக தமது கடந்தகால நடவடிக்கைகள் பற்றியும் புலிகள் இயக்கத்துள் மோதல் என்ற இந்திய உளவுப் படையினது வட-கிழக்கு மாகாண சபையினதும் பொய் பிரச்சாரத்தை முறி

கிளிநொச்சியில்

## புலிகளின் ஒலிபரப்பு சேவை

கிளிநொச்சி பஸ்நிலையத்துக்கு அருகில் புலிகளின் ஒலிபரப்பு சேவை ஒலி பெருக்கி புலிகளின் புரட்சி கீதங்களை ஒலிபரப்புவதுடன் அப்பகுதி விவசாயிகளுக்கு தற்சமயம் அப்பகுதி நெற்பயிர்களில் ஏற்பட்டிருக்கும் நோய்களை தடை செய்வதற்கான சிறந்த கிருமிநாசினி வகைகள் பற்றியும் அவை எவ் வகையில் கலந்து நெற்பயிர்களுக்கு விசிற வேண்டும் என்பது பற்றியும் பூரண விளக்கம் அடிக்கடி விவசாய பெருக்களுக்கு போதிக்கப்படுகிறது. இச் செய்திகளை கேட்டுக் கொண்டிருக்கும் விவசாயிகள் புலிகளின் சேவையை ஒருவருக்கொருவர் கூறி பெருமையடித்துக் கொள்வதை கேட்கக்கூடியதாக இருந்தது.

யடிக்க தேவையான ஆதாரங்கள் அடங்கிய படக்காட்சி ஒன்றையும், வில்லுப்பாட்டு கலைநிகழ்ச்சியும் நடாத்தினர். இந்நிகழ்ச்சிக்கு கிளிநொச்சி மக்கள் கடல்போல் திரண்டுகலந்து கொண்டனர். (ந.நி)

## திருமலையில் அக்கிரமம்

மட்டு-அம்பாறை மாவட்டங்களில் ஆளும் கட்சி கூட்டம் விடுதலைப்புலிகளிடம் பறிகொடுத்த பஜ்ரோ ஜீப்கள் மற்றும் பிக்கப் வான்கள் போன்றவற்றிற்கு விடுதலை புலிகள் அதிரடி படை உடை போன்ற வர்ணம் பூசி தற்சமயம் தமது பாவனைக்கு பயன்படுத்துவதை பரவலாக காணக்கூடியதாக உள்ளது. இது பற்றி ஒரு மட்டுநகர் வாசியிடம் கருத்து கேட்ட பொழுது, அவர் பின்வருமாறு கூறினர். குரங்கின் கை பூமாலையாக கட்டுக் கடங்கா வேகத்தில் அர்த்த மற்று ஓடித்திரிந்த வாகனங்களுக்கு கூட இன்று விடுதலை கிடைத்து விட்டது எனக்கூறினர்.

## எம். பி.யின் தம்பி மாமா திருமலை பஸ் நிலையத்தில் தவம்

களுவாஞ்சிக்குடி டெலோ கொலை முகாமின் பொறுப்பதிகாரியாக பணியாற்றியவனும் முன்னள் மீன் வியாபாரியுமான மாமா என்பவன் எப்படியோ உன்னிச்கை பகுதியில் இருந்து தப்பி திருகோணமலை பஸ் நிலையத்தில் தனது காலத்தை போக்கினுன் என கூறப்படுகிறது. மட்டுநகரை சேர்ந்த யாராவது தெரிந்தவர்களை கண்டால் அவர்களிடம் நலம் விசாரிப்பது போல் அணுகி பழைய வற்றை மறந்து விடுங்கள் என கூறி வருகின்றுனும். இப்படி இவன் ஒருவரிடம் கூறிவிட்டு சென்றபின் அவர் தன்னுடன் கூடவந்த நண்பரிடம் நான் மறக்கலாம். ஆனுல் இவன் அடித்த திருக்கை வால் அடி தழும்பு மறக்கக் கூடாது என எச்சரிக்கிறதே எனக்கூறி தனது முதுகில் மாமா வைத்த திருக்கைவால் குறியை காண்பித்தாராம்.

## துரோகக் கும்பல்களின் சமுகத் துரோகம்

கிளிநொச்சி மாவட்டத்தில் விடுதலை புலிகள் பிரவேசித்ததை தொடர்ந்து பல அதிர்ச்சி தகவல்களை அப்பகுதி மக்கள் வெளியிடுகின்றனர். அந்நிய ராணுவ மிருகங்களின் காமப்பசிக்கு இரையாக அவர்களின் கைக்கூலிகள் பல கன்னிப் பெண்களை கட்டாயப் படுத்தி பலி கொடுத்துள்ளார்கள். அந்நிய மிருகம் பகலில் மையல் கொள்ளும் ஏழை கன்னிப் பெண்களை எட்டப்பர் கும்பல் இரவில் துப்பாக்கி முனையில் பலாத்காரமாக கடத்தி சென்று அந்நியனுக்கு காணிக்கை செலுத்தியுள்ளார்களாம். இவ்விதமாக பல ஏழைப் பெண்களின் கற்பு பறிக்கப்பட்டு அவர்களின் எதிர்காலவாழ்வை நாசப்படுத்தி விட்டார்கள் துரோகிகள் என அக்கன்னியரின் பெற்றோரும், கன்னியரும் கண்ணீர் வடிக்கும் பரிதாபம் சகிக்க முடியாது துரோக கும்பல்களை பழிவாங்க பல பொதுமக்கள் துடித்துக் கொண்டிருக்கின்றனர். (ந. நி.)

## யார் பெரியவர்?

கிளிநொச்சிப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அலுவலாக சென்ற ஒருவரிடம் ஈ.என்.டி.எல்.எப். இயக்கத்தை சார்ந்த ஓர் கிரிமினல் குண்டன் கிளிநொச்சி பகுதியின் நிலைமைகளை விசாரிக்கையில் பெரியவர்கள் தான் அங்கு நிலை கொண்டுள்ளார்கள் என கூறியிருக்கினர் கிளிநொச்சிக்காரர். உடனே ஈ. என். டி. எல். எப். கிரிமினல் குண்டன் யாரடா பெரியவர் ஏன் நாங்கள் பெரியவர்களாக உனக்கு தெரியவில்லையா என கேட்டு அவ் அப்பாவியை செமத்தியாக உதைத்து தள்ளினனும். (ந. நி)

## ஆசிரியர்களுக்குஅறிவுரை

மட்டக்களப்பு மாவட்ட பாடசாலை ஆசிரியர்களை சந்தித்தபுலிகள் பாடசாலை பிள்ளைகளுக்கு தகுந்த முறையில் கரிசனையுடன் பாடங்களை போதிக்க வேண்டுமெனவும் கடந்த இருவருடகால எல்லைக்குள் தடைப்பட்ட கல்வியின் இடைவெளியை நிரப்பக் கூடியவகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டுள்ளதாக பேச்சுகள் அடிபடுகின்றது.

பிரத்தியேக ரியூட்டரிகளில் அளவுக்கு அதிகமாக கட்டணம் அறவிடுவதை தடை செய்துள்ளதாகவும் இந்நடவடிக்கையால் ஏழை பெற்றோர்களின் பொருளாதார சுமைசற்றுகுறைக்கப்பட்டுள்ளதாக பெற்றோர்கள் மகிழ்கின்றனர்

## அரை றுத்தல் பாணுக்காக ஒரு றிவோல்வர்

அண்மையில் மட்டு மாவட்டத்தின் உன்னிச்சை பகுதியில் விடுதலை புலிகளுடன் யுத்தம் புரிந்து இறுதியில் படுதோல்வியடைந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள எண்ணி திசை தெரியாது அகப்பட்ட பாதைகளில் பயணம் செய்த மாகாணசபை கூட்டம் வழியில் சில சிங்களக் கிராமங்களில் தஞ்சம் அடைந்து தமது பலநாள் பசியை போக்கிக்கொள்ள கதியற்ற நிலையில் தம்வசம் இறுதியாக தற்பாதுகாப்புக்காக தம்முடன் எடுத்துச்சென்ற கைத்துப்பாக்கியை கொடுத்து அரை இருத்தல் பாண் வாங்கி உண்டனராம்.

ஊழல் பேர்வழிகள்

## புலிகள் பக்கம்சாய்வு

கடந்த இரண்டு வருடங்களாக பொதுமக்களை ஏய்த்து பிழைத்தவர்களும் பொதுமக்கள் பெயரால் தமது பையை நிரப்பி வந்தவர்களும் மாகாணசபை துரோகிகளுக்கு ஆலவட்டம் பிடித்து தம்மை வளம் படுத்தியவர்களுமான பல சமூக துரோக கும்பல்கள் தற்சமயம் விடுதலை புலிகள் பால் தீவிர பாசம் கொண்டவர்கள்போல் நடித்து தமது பையை தொடர்ந்தும் நிரப்பிக் கொள்வதில் மிகமிக குறியாக செயல் படுகின்றனர். இவர்களை சரியாக இனங்கண்டு கொண்ட புலிகள் மிகவும் ஜாக்கிரதையாக செயல் படுகிறார்கள்.

## ஒருவனின் மரணம் விதவைகள் பல

அண்மையில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களை விட்டு வெளியேறியபின் இந்திய உளவுப்படையின் அறிவுறுத்தலுக்கிணங்க ஆரம்பிக்கப்பட்ட மாகாணசபை ஆளுங்கட்சியினதும் அவர்களின் நேச அணிகளினதும் பயங்கரவாத நடவடிக்கைகளில் மாண்டுபோன கிரிமினல் இயக்கத்தினர் பலரின் இழப்பால் தலைக்கு மூன்று, நான்கு என்ற விகிதத்தில் விதவைகள் உருவாக்கப்பட்டு விட்டனர். கிரிமினல் குண்டர்களின் மன்மத லீலைகளால் ஏற்பட்ட இழப்புக்கள் தற்சமயம் மெதுவாக வெளியாகிறது. மரணம் அடைந்தவர்களுக்கு புனர்வாழ்வு அமைச்சு வழங்கும் பணமான ரூபா ஐம்பதாயிரம் (50,000) இவ் விதவைகள் பெறுவதற்கு அருகதையற்றவர்களாம். காரணம் பெரும்பாலான கேடிகள் எந்தப் பெண்ணையும் பதிவு திருமணம் செய்து கொள்ள வில்லையாம்.


## ஏஜன்சிகள் தேவை

உண்மை பத்திரிகை விற்பனை செய்வதற்கு நாடு முழுவதும் ஏஜன்சிகள் தேவை. முன்பணம் செலுத்தக்கூடியவர்கள்விண்ணப்பிக்கவும்.நியாயமான கமிஷன் வழங்கப்படும். மேலதிகவிபரங்களுக்கு கீழ்க்காணும் விலாசத்தில் விற்பனை முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

முகாமையாளர்
16 16வ்து ஒழுங்கை
கல்லூரி வீதி
கொழும்பு13


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எத்தளம் தான் போனாலும் முஸ்லிம் காங்கிரஸ் புத்தளம் போக முடியாது

உண்மை தனது ஆரம்ப இதழ் முதல் இன்றுவரை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தோற்றம் ஒருசில தனி நபர்களின் சுயநலத்துக்கும் பதவி மோகத்தை தீர்த்துக் கொள்வதற்காகவும் உருவாக்கப்பட்டுள்ளது என்ற உண்மையை அடித்துக் கூறி வருவது வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம். இவ்வாறு முஸ்லிம் காங்கிரசை இனங்காட்டிவரும் உண்மை இதழை சில முஸ்லிம் வாசகர்கள் சந்தேகித்து பல மடல்களை உண்மைக்கு அனுப்பிவைத்தும் உள்ளார்கள்.

முஸ்லிம் மகனின் நீண்ட கால வளமான வாழ்வுக்கு இலை மறைகாய்களானமுஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி, முஸ்லிம் லீக் வாலிப முன்னணி பாமிஸ் அமைப்பினரும் எவ்விதமாக செயலாற்றி வருகின்றனரோ அதேபோல் பத்திரிகை துறை அரசியலில் உண்மை முஸ்லிம் மக்களை மத ரீதியாக பிரித்து நோக்காது தமிழ்பேசும் மக்கள் என்ற அடிப்படையில் பலத்த சோதனைகளுக்கு மத்தியில் உண்மையான சமூகப்பற்றுடன் செயல்பட்டு வந்திருக்கின்றது என்பதை கொழும்பில் வெளியாகும் வாராந்தப்பத்திரிகையின் 15-வது இதழில் வெளியான கட்டுரை நிரூபித்திருக்கின்றது மேற்படி பத்திரிகைஇதற்கு முந்திய இதழ்களில் முஸ்லிம் காங்கிரசுக்கு முண்டு கொடுத்து வந்ததையும் இங்கு சுட்டிக்காட்டவேண்டியது அவசியமாகிறது.

இப்பத்திரிகை பயிற்சிக்கு சென்றோர் பட்ட துயர் மிளகாய் கரைப்பில் நிர்வாணக்குவிப்பு! என்ற தலைப்பில் முஸ்லிம் காங்கிரஸ் மாகாணசபை உறுப்பினரின் வேண்டுதலின்பேரில் முஸ்லிம் இளைஞர்கள் மக்கள் தொண்டர் படை என்னும் பயிற்சிக்கு சென்றதாகவும் அங்கு அவர்கள் சித்திரவதைகளை அனுபவித்ததாகவும் திரைமறைவில் இருந்த உண்மைகளை தமது விசேட நிருபர் தப்பியோடி வந்த இளைஞர்களை பேட்டி கண்டபோது வெளிவந்ததாகவும் குறிப்பிட்டுள்ளது. இந்த நாசகார செயலில் முஸ்லிம் இளம் மக்கள் பிரதிநிதி ஒருவர் பாரிய பங்களிப்பு செய்ததாக மட்டுநகரில் பேச்சுக்கள் அடிபடுகின்றபோதும் அது பத்திரிகையில் குறிப்பிடப்படாததன் மர்மம் என்னவோ தெரியவில்லை. இதே பத்திரிகை தனது இவை நமக்குள்ளே என்ற பகுதியில் முஸ்லிம் காங்கிரசின் செல்வாக்கில் இப்போது சரிவு ஏற்பட்டுள்ளதாம். எத்தளம் சென்றாலும் முஸ்லிம் காங்கிரஸ் புத்தளம் வரக் கூடாது என்று அங்குள்ளோர் உண்மையாக கூறுகின்றனர் எனவும் குறிப்பிட்டுள்ளது.

உண்மை இச்செய்திகளை மார்கழி 15ம் திகதி பத்திரிகையிலும் இவ்வருட தை 15ம் திகதி பத்திரிகையிலும் வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

எது எவ்வாறாயினும் முஸ்லிம் காங்கிரஸ் ஒரு சில தனி நபர்களின் சுயலாபத்திற்காகவும் பதவி மோகத்திற்காகவும் உருவாக்கப்பட்ட கட்சி என்பதை முஸ்லிம் மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியமானது. உண்மையின் உறுதியான நோக்கம் கொண்ட இக்கருத்தை வாசகர்கள் முஸ்லிம்கள் தனிக்கட்சி அமைக்கக் கூடாது என கூறுவதாக தவறாக புரிந்து கொள்ளக் கூடாது. முஸ்லிம்களின் நலன்களை பேணுவதற்காக ஓர் கட்சி இருப்பது வரவேற்க கூடியதே. ஆனால் அந்தக்கட்சி இன மத வாத அடிப்படையை கொண்ட கட்சியாக அல்லாது முஸ்லிம் சமூகத்தின் நீண்ட கால சுபீட்சத்தை கருத்தில் கொண்டு ஏனைய பெரும்பான்மை, சிறுபான்மை இனங்களுடன் ஐக்கியமான உறவை கொண்டதாக இருக்க வேண்டுமே தவிர கட்சியின் தலைமைகளின் அபிலாஷைகளை நிறைவேற்றி கொள்ளும் சுயநல கட்சியாக இருக்கக்கூடாது என்பதே உண்மையின் நிலைப்பாடு.

ஹனிபா

குறிப்பு: எமது வாசகர்களில் சிலரின் சந்தேக கண்ணோட்டத்தை தெளிவு படுத்துமுகமாக விரைவில் உண்மை முஸ்லிம் காங்கிரஸ் பற்றி வெளியிட்ட கருத்துக்கள் பற்றியும் அவை எவ்வளவு தூரம் தீர்க்கதரிசனமான நீண்ட கால நலன்களை கருத்தில் கொண்டு வரையப்பட்டவை என்பதை ஆதார பூர்வமாக முஸ்லிம் வாசகர்களுக்கு தொடர் கட்டுரை வடிவத்தில் வெளியிட ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகிறது என்பதை தெரியத்தருகின்றோம். (ஆ-ர்)

## மீண்டும்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

காக எழுதப்பட்டுள்ளது என யாராவது கருதினால் அது தவறானது. கடந்த 40 வருடங்களுக்கு மேலாக இரத்தம் சிந்திப்பெற்ற அனுபவங்களை சீர் தூக்கிப் பார்ப்பின் இலங்கை தமிழ் தேசிய இனப்பிரச்சினையை அந்நிய விஸ்தரிப்புவாத சக்திகள் தமிழ் தேசிய இனப்பிரச்சினையை தமக்கு சாதகமாக பயன்படுத்துவதற்காக இலங்கை இனப் பிரச்சினை முற்றுப் பெறுவதை தடை செய்யும் முயற்சிகளை திரைமறைவில் மேற்கொண்டு வரும் வேளையில் இலங்கை தமிழ் பேசும் மக்களின் நீண்ட கால நலன்களை கருத்தில் கொண்டு உடனடியான ஓர் தீர்வை அடைய வேண்டியதன் அவசியம் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறான நிலைப்பாட்டில் இன்று அரசு தரப்பும் துரதிருஷ்டி சிந்தனையுடன் பரஸ்பரம் புரிந்துணர்வாக செயல்பட்டு தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்கு ஓர் தீர்வு ஏற்படக் கூடிய பல நல்ல சகுனங்கள் தென்படுவது அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இவ்வாறாக தமிழ் தேசிய இனப்பிரச்சினை நம்பிக்கை நட்சத்திரங்கள் தென்படும் வேளை தமிழ் மக்களின் பிரச்சினைகள் எனக் கூறிக் கொண்டு விடுதலைப்புலிகளின் மக்கள் மத்தியில் ஆதரவை கபடத்தனமாக சுவீகரித்து பாராளுமன்ற படிக்கட்டுகளை ஏறி தமது சுய தேவைகளுக்காக அரசாங்கத்திடம் பின் கதவுகளால் சாதித்துக் கொள்ளும் ஈரோஸ் இயக்கத்தை தமிழ்பேசும் மக்கள் இனம் கண்டு ஒதுக்கித் தள்ள வேண்டும். வசந்தன்

## அரக்கன்

(1ம் பக்கத் தொடர்)

இங்கு பகிர்ந்து கொள்வோம்.

★ ஜோர்ஜ் அந்நிய ராணுவ உயர் அதிகாரி ஒருவரின் காமப் பசிக்கு இரையாக பலாத்காரமாக பல ஏழைப் பெண்களை காணிக்கையாக செலுத்தி தான் அந்நிய ராணுவ உயரதிகாரியின் ஆதரவில் ராணுவ உயர் அதிகாரி போன்ற ஸ்தானத்தை பெற்றுக்கொள்ளும் முயற்சியில் தீவிரமாக செயல்பட்டானும்.

★ திருமலையில் பரபரப்பை ஏற்படுத்திய டாக்டர் ஞானசேகரனை கடத்தி கொலை செய்ததும் இவன் தான் என்ற கருத்து திடமானதாக பேசப்படுகிறது.

★ முன்னாள் பிரபல தொழில் அதிபர் தற்கொலை செய்து கொண்டமைக்கும் இவன்தான் காரணகர்த்தா எனவும் பேசப்படுகிறது.

★ திருமலையில் கட்டாய ராணுவ ஆட்சேர்ப்புக்கு தமிழ் இளைஞர்களை பலாத்காரமாக பிடிப்பதில் முன்னணியில் இருந்து தீவிரமாக செயல்பட்டவனும் இவனே எனக் கூறப்படுகிறது.

★ திருமலை பகுதியில் நடைபெற்ற பல கிரிமினல் நடவடிக்கைகளின் சூத்திரதாரியும் இவனே என கூறப்படுகிறது.

இதுபோல் பல நூற்றுக் கணக்கான குற்றச்சாட்டுகள் மக்கள் மத்தியில்பேசப்படுகிறது. கட்டாய பயிற்சிக்கு பிடிக்கப்பட்ட தனது நோயாளி மகனொருவனை மீட்டெடுக்கும் முயற்சியாக ஓர் ஏழைத் தாய் இவனை நாடி, இவனது வீட்டுக்கு சென்றபோது இவன் தனது குடும்பத்தாரோடு ரீ. வி. படக்காட்சியை ஆனந்தமாக பார்த்துக்கொண்டிருந்தானும். ஏழைத்தமிழ் தாயும் ஏறக் குறைய ஒன்றரை மணி நேரம் இவனது வீட்டுவாசலில் தவம் இருந்தாராம். ஒன்றரை மணி கழித்து படக்காட்சி முடிவுற்றது. இவன் எழுந்துவந்து அந்த தாயிடம் விபரத்தை கேட்டு அத்தமிழ் தாயை கீழ்த்தரமான வார்த்தைகளால் தூஷித்துவிட்டு கதவை அடைத்து விட்டு சென்றுவிட்டானும். ஏமாற்றம், வேதனை ஆகியவற்றை சுமந்துகொண்டுவெறுமனே திரும்பிய அத்தாய் இந்த அரக்கன் விரைவில் சரிவான் எனக்கூறி கோணமலை அமர்ந்த திருக்கோணேஸ்வரரை பார்த்து கூறிவிட்டு கண்ணீரும் கம்பலையுமாக சென்ற காட்சியை கண்ணுற்ற ஒருவர் ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளுக்கு சமன். அந்த ஏழைத்தாயின் வேண்டுதலுக்கமைய திருக்கோணேசுவரர் அரக்கனை சரித்து விட்டான் என பேசிகொண்டதையும் கேட்கக் கூடியதாகஇருந்தது. குறிப்பாக திருகோணமலை பகுதியில் ஆகக்கூடிய கிரிமினல் நடவடிக்கைகளின் கதாநாயகன் இந்த ஜோர்ஜ் தான் என மக்கள் கூறுகின்றனர். இதனால்தான் ஜோர்ஜின் மரணம் மக்கள் மத்தியில் மகிழ்ச்சியைஏற்படுத்தியுள்ளது. (ந. நி.)

## இன்று....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இய பகுதிகளைத்திலிருந்தும் அந்நிய கூலிப்படையினர் வாபஸாகிக் கொண்டிருப்பது தெரிந்ததே. மேற்படி ஒவ்வொரு அந்நியப்படை முகாம்களும் பலாலி நோக்கி தமது பெட்டி படுக்கைகளுடன் திரும்பிக்கொண்டிருந்த வேளைகளில் இந்திய சகபாடி இயக்கக் குண்டர்கள் தமது இறுதி கைவரிசைகளை காட்டியவண்ணம் கொலை, கொள்ளை என்று பலவாறான கிரிமினல் வேலைகளில் ஈடுபடுகின்றனர் என தெரிய வருகின்றன.

இதேநேரத்தில் விடுதலை புலிகளின் அதிரடித் தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாததுடன் இந்திய ராணுவத்தால் அனாதரவாக அம்போ என கைவிடப்பட்ட நிலையில் தமிழ் தேசிய ராணுவம் என அழைக்கப்படும் தேச விரோத கும்பல்கள் தவியாய் தவித்து தொடர்ந்து தம்மிடம் எஞ்சியிருக்கும் அந்நிய உளவுப் படையால் கைவிடப்பட்ட பாரிய குண்டுகள், ஷெல், போன்றவற்றை நகரெங்கும் கண் மூடித்தனமாக பயன்படுத்துவதாகத் தெரியவருகிறது.

இதன் காரணமாக ஏற்பட்ட பதட்ட நிலையினால் நகரின் பொது சேவைகள் யாவும் ஸ்தம்பிதமடைந்துள்ளதுடன் மக்களும் தமது வசிப்பிடங்களைவிட்டு பாதுகாப்புக்காக வெளியேற வேண்டிய இக்கட்டான நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

எது எவ்வாறாயினும் இன்னும் ஓரிரு தினங்களில் யாழ்நகர் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள்ளாகி அமைதி காற்று வீசத் தொடங்கி விடுமென பெரும்பாலான யாழ். நகர வாசிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

## அறிவித்தல்

01-01-90ம் திகதிய உண்மை பத்திரிகையில் காடையர் கைவரிசை என்ற தலைப்பில் வெளியான செய்தியில் குறிப்பிட்டுள்ள மோகன் எனப்படும் நபரை தெற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த காசித்தம்பி சிவமோகன் ஆகிய என்னுடன் சில விஷமிகள் தொடர்பு படுத்துவதாக அறிகின்றேன். உண்மையில் இக்கொள்ளைகுழுவிற்கும் காசித்தம்பிமோகன் ஆகிய எனக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்பதை இத்தால் பகிரங்கமாக அறிவித்துக் கொள்கிறேன்.

இவ்வண்ணம்
ஒப்பம்
காசித்தம்பி சிவமோகன்

இப்பத்திரிகை கொழும்பு 15, 65, பொ[illegible] வீதியிலுள்ள உண்மை வெளியீட்டகத்தினால் கொழும்பு ரா்ஸீகா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org